# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

## 10,000 எண்ணிக்கை EN 45 E1 RAILS of (45”00”) R 260 – EN 13674 வழங்கலுக்கான பெறுகை

1. இலங்கை புகையிரத சேவைகளுக்கு 10,000 எண்ணிக்கை EN 45 E1 RAILS of (45”00”) R 260 – EN 13674 வழங்கலுக்காக பொதுத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை, கொழும்பு, த. பெட்டி 355, புகையிரத சேவைகள் தலைமையகம், இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் நிலையான உயர்மட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுதாரர்கள் அற்றோனி தத்துவம் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர் ஒருவரைக் கொண்டு தமது விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வார நாட்களில் 2025.06.24 ஆம் திகதி தொடக்கம் 2025.08.05 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

   பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),
   பெறுகை உப திணைக்களம்,
   ஒல்கொட் மாவத்தை,
   கொழும்பு 10, இலக்கை.
   தொலைபேசி இல.: 94(11) 2438078 அல்லது 94(11) 4600202
   தொலைநகல் இல.: 94(11) 2432044
   மின்னஞ்சல்: srs.slr@gmail.com , tender1@railway.gov.lk
   இணையதளம்: www.railway.gov.lk

4. தேவையான தகைமைகளில் உள்ளடங்குவன:
   a. இந்த ஒப்பந்தத்தின் கீழ் பொருட்களை வழங்கல் விலைமனுவுடன் வழங்கப்பட்ட RSS 557A புகையிரத சேவைகள் களஞ்சியங்கள் விபரக்குறிப்புகளுக்கு உறுதிப்படுத்தல் வேண்டும்.
   b. கூறுவிலையுடன் சமர்ப்பிக்கப்படும் உருப்படியின் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான ISO 9001:2008 சான்றிதழ்கள்.
   c. தகுதியுடைய விலைமனுதாரர்கள்:
      i. அனைத்து விலைமனுதாரர்களும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பொருட்களை வழங்குவதற்கு சட்ட உரிமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.
      ii. விலைமனுதாரர் ஒருவர் ஆர்வ முரண் ஒன்றை பெற்றிருத்தல் ஆகாது. ஆர்வ முரணை பெற்றதாக கண்டறியப்படும் அனைத்து விலைமனுதாரர்களும் தகுதியிழக்கப்படுவார்கள். இந்த விலைமனு நடைமுறையில் விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களுடன் தொடர்புபட்டால் ஆர்வ முரண் ஒன்றாக கருதப்படும்.
         (a) இந்த விலைமனு ஆவணங்களை வாங்குவதற்கு பொருட்களின் பெறுகைக்காக பயன்படுத்தப்படுவதற்கு வடிவத்தின் தயார்படுத்தல், விபரக்குறிப்புகள் மற்றும் மற்ற ஆவணங்களுக்காக ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு கொள்வனவாளர்கள் மூலம் ஈடுபடுத்தப்பட்ட நிறுவனம் அல்லது அதன் எந்த ஒரு இணை நிறுவனத்துடனும் கடந்த காலத்தில் தொடர்புபட்டிருத்தல், அல்லது
         (b) இந்த விலைமனு நடைமுறையில் ஒன்றுக்கு மேற்பட்ட விலைமனுவை சமர்ப்பித்தல். எவ்வாறாயினும், ஒன்றுக்கு மேற்பட்ட விலைமனுவில் உப ஒப்பந்ததாரர்களின் பங்கேற்பு மட்டுப்படுத்தப்படமாட்டாது.
      iii. கடந்த பத்து (10) ஆண்டுகளுக்குள் சர்வதேச போட்டிரீதியான விலைமனு அடிப்படையில் குறைந்தபட்ச மொத்த அளவில் 5,000 எண்ணிக்கையான (3000 தொன்கள்) – EN 45E1/ BS 90 (A) சுயடைள இன் வழங்கலுக்காக பயனாளர் அமைப்பு ஒன்றினால் வழங்கப்பட்ட செயல்திறனின் சான்றிதழ்களை உற்பத்தியாளர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
      iv. உற்பத்தியாளர்/கள் நுே 13674 தரத்தின்படி கடந்த பத்து (10) ஆண்டுகளுக்குள் குறைந்தபட்ச ளை. மொத்த அளவில் 5,000 எண்ணிக்கையான (3000 தொன்கள்) – EN 45E1/ BS 90 (A) Rails மற்றும் கடந்த மூன்று (3) ஆண்டுகளுக்குள் 50,000 தொன்கள் மற்ற ரயில் விபரங்களை வழங்கியதற்காக தமது அரசிடம் இருந்து சான்றிதழ் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. a. எந்த ஒரு விலைமனுதாரர் சார்பாக முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்ல பரிந்துரையாளர் ஒருவராக செயற்பாடும் எந்த ஒரு நபரும் விலைனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் தம்மை 1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் தேவையின்படி இலங்கை பொது ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்தல் வேண்டும். பதிவின் அசல் சான்றிதழை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அசல் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   b. விலைமனுதாரர்களும் விலைமனுக்களை சமர்ப்பித்த உடன் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் தேவைக்கு அமைய, இலங்கை பொது ஒப்பந்தப் பதிவாளருடன் தம்மை பதிவு செய்தல் வேண்டும். அவ்வாறான விலைமனுதாரர்கள் தொடர்புடைய பெறுகைக் குழுவுக்கு பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளில் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்காத வரை எந்த ஒரு விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்படமாட்டாது.
6. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, தலைமை பொறியியலாளர் (பாதை மற்றும் வேலைகள்) அலுவலகத்தில் 2025.07.15 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும்.
7. மீளளிக்கப்படாத பெறுகை கட்டணமாக ரூபா 150,000 மாத்திரம் அல்லது அதற்கு இணையான சுதந்திரமாக மாற்றக்கூடிய நாணயம் ஒன்றில் செலுத்தி பி.ப. 3.00 வரை (இலங்கை நேரம்) 2025.06.24 ஆம் திகதி தொடக்கம் 2025.08.05 ஆம் திகதி வரை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, பெறுகை உப திணைக்களம், புகையிரத சேவைகள் பிரதி பொது முகாமையாளரின் அலுவலக முகவரிக்கு அல்லது வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
8. விலைமனுக்களை 2025.08.06 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**நிலையான உயர்மட்ட பெறுகைக் குழு,**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,**
**துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவை அமைச்சு,**
**7ஆவது மாடி, செத்சிறிபாய,**
**கட்டம் 11, பத்தரமுல்லை,**
**இலங்கை.**

9. தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2025.08.06ஆம் திகதி பி.ப. 2.00 இற்கு இலங்கை, பத்தரமுல்லை, கட்டம் 11, செத்சிறிபாய, 7ஆவது மாடி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவை அமைச்சு, சபை அறையில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**நிலையான உயர் மட்ட பெறுகைக் குழு,**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,**
**துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவை அமைச்சு,**

**Ref. No. SRS/F.8089**